1983 பிப்ரவரி 2]

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்திலே, 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்தப் பணிகள் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் பகுதிகளில் வேலை நடைபெறுகிற சூழ்நிலையை கவனித்தால், மிக மெத்தனமாக இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, எப்படியாவது காரணம் காட்டி, மிக வறுமையான பஞ்சத்தில் அடிப்பட்ட பிரதேசம் என்பதால் முன்னுரிமை கொடுத்து அந்தப் பணிகளை 1984 டிசம்பருக்கு முன்னதாகவே முடிக்க தேவையான ஆணைகளை இட அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில பகுதிகளிலே இந்த வேலைகள் மிகவும் காலதாமதமாக இருப்பதற்கு காரணமே முதலாவதாக தயாரிக்கப்பட்ட திட்டங்களை முழுவதுமாக உலக வங்கி ஏற்றுக்கொள்ளவில்லை. சில பகுதிகளுக்குத்தான் ஒப்புதல் அளித்தார்கள். ஆனாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அந்தப் பகுதியினுடைய பின் தங்கிய நிலைமை எடுத்துக்காட்டி அவசியம் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னதன் காரணமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இந்தப் பகுதிகளைச் சேர்க்க வேண்டுமென்று—குறிப்பாக சிவகங்கைப் பகுதியையும் சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே உத்திரவிட்டார்கள். அந்த அடிப்படையிலே திருப்பவும் ஆய்வு செய்து பணிகளை துவங்குகிறபோது, ஒவ்வொரு பணியையும் நிறைவேற்றுவதில் கால வேறுபாடு இருக்கலாம். ஆனால், எல்லாவற்றையும் 1984-க்குள் முடித்துவிட வேண்டுமென்று ஒரு முனைப்போடு அரசு இயங்கிக் கொண்டு வருகிறது.

சேடப்பட்டி, சின்னக்கட்டளைப் பகுதியில் கிடைக்கும் சுண்ணாம்புக் கற்கள்.

*வினா எண் 117—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் சேடப்பட்டி, சின்னக்கட்டளைப் பகுதியில் கிடைக்கும் சுண்ணாம்புக் கல்லின் தரம் ஆராயப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், தரமான அச் சுண்ணாம்புக்கல்லை பயன்படுத்தி ஒரு சிமிண்ட் ஆலை நிறுவப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம் சேடப்பட்டி, சின்னக்கட்டளைப் பகுதியில் காணப்படும் தரம் குறைந்த சுண்ணாம்புக்கற்கள் சுக்காங்கல் (Kankar) என்ற வகையைச் சார்ந்ததாகும், இச்சுண்ணாம்புக்கற்களில் சுண்ணாம்புச்சத்து குறைவாக உள்ள தால் இதனை சிமெண்ட் உற்பத்தியில் பயன்படுத்தல் இயலாது.

திரு. இரா. முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சேடப்பட்டி, சின்னக்கட்டளைப் பகுதிகளில் காணப்பெறும் சுண்ணாம்புக்கல் தரம் உயர்வு இல்லாத காரணத் தால் சிமெண்ட் உற்பத்தியில் பயன்படுத்துவதற்கு இயலாது என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால், அந்தப் பகுதியில் கிடைக்கக்கூடிய இந்த சுண்ணாம்புக் கற்களை இப்பொழுதும் பல தனியார்கள், எந்தவிதமான அனுமதியும் இல்லாமல் சில இடங் களில் இருந்து எடுத்துக் கொண்டு வேறு இடங்களில் சென்று, சிமெண்ட் தயாரிப்பது போன்ற காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள் ஆகையினால், ஒரு சிமெண்ட் ஆலையை நிறுவும் அளவுக்கு முழுமையாக பயன்படுத்த முடியாவிட்டாலும்—வேறுவகையில்—சிறு அளவிலாவது இதைப் பயன்படுத்தி சிமெண்ட் தயாரிக்க அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல, சிமெண்ட் தொழிற்சாலையில் பயன்படுத்துவதற்குரிய போதிய தரம் அங்கே கிடைக்கக்கூடிய சுண்ணாம்புக் கற்களுக்கு இல்லாத காரணத்தால் அதைப் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது. பெரிய ஆலையாக இருந்தாலும், சிறிய ஆலையாக இருந்தாலும். ரா-மெட்டீரியல் மூலப்பொருள்கள் ஒன்று தான். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்டதைப் போல அதனை பயன்படுத்தி வேறு ஏதாவது செய்ய முடியுமா என்பதைப் பற்றி வேண்டுமானால் மேலும் ஜியாலஜி டிபார்ட்மெண்டிலே சொல்லி ஆய்வு செய்யச் சொல்லலாம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான சுண்ணாம்புக் கல்லாக இல்லாத காரணத்தால், அங்கே சிமெண்ட் ஆலையை நிறுவமுடியாது என்று அமைச்சர் அவர்கள் பதிலளித்திருக் கிறார்கள். மதுரை மாவட்டத்தில் பாளையத்தில் தரமான சுண்ணாம்புக்கல்கிடைப்பதாகச் சொல்லப்படுகிறதே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு சிமெண்ட் ஆலையை நிறுவு வதற்கு ஆவன செய்ய முன் வருவாரா என்று அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையத்தில் ஒரு சிமெண்ட் ஆலை நிறுவவேண்டும் என ஏற்கெனவே மாநில அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. நிதி ஒதுக்கப்பட்டு, நில ஆர்ஜிதமும் செய்யப்பட்டு விட்டது. தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பொரேஷன் அந்தப்பகுதியில் சுமார் 40 கோடி ரூபாய் திட்டத்தில் ஒரு சிமெண்ட் ஆலையை நிறுவ உத்தேசித்துள்ளது. அதன் ஆய்வு மைய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. முதலில் கரூர், திண்டுக்கல் பகுதிகளில் ரெயில்வே லைன் இல்லை என்று காரணம்காட்டி நிராகரிக்கப்பட்டது, அது சேர்க்கப்பட்டதற்கு பின்னாலே, நிலக்கரி இருப்பு இல்லை என்று சொல்லி—1990 ஆம் ஆண்டு வரையில் நிலக்கரி கொடுப்பதற்கு புதிதாக கேரண்ட்டி கிடையாது என்று சொல்லி—மீண்டும் நிராகரித்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு ஒன்றிரண்டு வேறு மாநிலங்களுக்கு நிலக்கரிக்கான லைசன்ஸ் கொடுக்கப்பெற்றதாகத் தெரிகிறது. பாளையத்தில் சிமெண்ட் ஆலை வேண்டும் என்று ஏற்கெனவே கொடுக்கப்பெற்ற மனுவை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று மைய அரசை மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தும்.

தமிழகத்தில் தொழிற்துறையில் பின்தங்கியவையென அறிவிக்கப்பட்டுள்ள மாவட்டங்கள்.

*வினா எண் 118—திரு எம். சின்னசாமி: திரு. திருச்சி ஆர், சௌந்திரராஜன்: திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்துறையில் பின்தங்கிய மாவட்டங்களாக 87 மாவட்டங்களை (Industrially Backward Districts) மைய அரசு அறிவித்திருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் தமிழகத்தில் எத்தனை மாவட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) அண்டு (ஆ) பல்வேறு பகுதிகளுக்கிடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளை சரி செய்து பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதே மைய அரசின் முக்கிய குறிக்கோளாகும். மைய அரசின் கொள்கையின் அடிப்படையில் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள் இல்லாத 82 மாவட்டங்களில் தொழில் துவங்க வரும் விண்ணப்பங்களுக்கு பிற பகுதிகளிலிருந்து வரும் விண்ணப்பங்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை,